3rd August 1966]

THE HON. SRI S. M. A. MAJID : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VI.—PRESENTATION OF REPORTS.

(1) REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE AUDIT REPORT ON THE ACCOUNTS OF THE MADRAS STATE ELECTRICITY BOARD FOR THE YEAR 1958–59 TO 1961–62.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1958-59 முதல் 1961-62 வரையுள்ள ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்துச் செய்த தணிக்கை அறிக்கைகளின் மீது பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கையை இந்த மன்றத்தின் முன் நான் வைக்கிறேன்.

(2) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES ON THE MADRAS RECORD OFFICE.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on the Madras Record Office (Second Report).

VII.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள தீர்மானத்தை நான் இப்பொழுது 9-30 a.m
முன்மொழிகிறேன் :—

"கீழ்க்கண்ட காரணங்களையும், வேறு சில காரணங்களையும் ஒட்டி கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகிற அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கை இழந்துவிட்டது என்பதை இந்தப் பேரவை தெரிவித்துக் கொள்ளுகிறது :—

(1) இந்த அரசாங்கம், பொதுவாக எல்லாப் பண்டங்களின்—குறிப்பாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற இன்றியமையாத பண்டங்களின் மிதமிஞ்சிய விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது;

(2) இந்த அரசாங்கம் இந்த மாநிலத்தில் உணவு நிலைமையைச் சீராக்கவும், விவசாயத்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்கவும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தரவும் தவறிவிட்டது ;

(3) இந்த அரசாங்கம் தொழில் நுட்பக் கல்வித் துறைகளுக்கு, குறிப்பாக மருத்துவக் கல்வித் துறைக்கு மாணவ, மாணவியரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செம்மையான முறையில் செய்யத் தவறிவிட்டது ;

(4) இந்த அரசாங்கம் கோயம்பத்தூரில் மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்யவும், சென்ற சில திங்கள்களாக வேலையின்றித் தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்களின் துயரத்தை துடைக்கவும் தவறிவிட்டது ;